

# மாவீரர்நாள் பேச்சுப்போட்டி
# 2024

**பிரிவு – 11 வயது (வகுப்பு 6)**

**தமிழ் எங்கள் தாய்மொழி**

தமிழே! தமிழே! எம்தாயே!
இத்தரணியர் போற்றும் தமிழ்த்தாயே!
அன்றும் இன்றும் என்றும் கன்னி நீ!
அமிழ்தம் ஆன எங்கள் அன்னை நீ!

எங்கள் தாய்மொழியாம் தமிழ்மொழி தேனினும் இனிமையானது. அமிழ்தப் பாலாய் எமது அன்னையரால் எமக்கு ஊட்டப்பட்டது. அதனால் எம் ஊனோடும் உயிரோடும் கலந்துவிட்டது.

எம் வாழ்வோடு என்றும் கலந்துவிட்ட எம் தாய்மொழி தமிழை நாம் சுவைத்துப் பார்க்கவேண்டாமா? ருசித்துப் பார்க்கவேண்டாமா? ரசித்துப் பார்க்கவேண்டாமா? அப்பொழுதுதானே அதன் அருமை, பெருமை, செழுமை, வளமை என அத்தனையையும் நாம் உணரமுடியும்.

எம் தாய்மொழி தமிழ் எப்பொழுது தோன்றியது என்று எவராலும் அறுதியிட்டுச் சொல்லமுடியவில்லை. காரணம், அதன் தொன்மை அளவிடமுடியாதது.

கம்பன், வள்ளுவன், இளங்கோவன், பாரதி, பாரதிதாசன், காசி ஆனந்தன், புதுவை இரத்தினதுரை என எண்ணற்ற புகழ்பெற்றோரை வாரி வழங்கியிருக்கிறது.

சொற்சிறப்பு, பொருட்சிறப்பு, கவிச்சிறப்பு உடையது நம் தமிழ்.

'சொல்லில் உயர்வு தமிழ்ச்சொல்லே' என்கிறார் பாரதி.
'தமிழ் என் உயிர்' என்கிறார் பாரதிதாசன்.
'அகரமே எழுத்துகளுக்கெல்லாம் முதல்' என்கிறார் வள்ளுவர்.
'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்கிறார் கணியன் பூங்குன்றனார்.

உலகில் பல மொழிகள் அழிந்துவிட்டன. ஆனால், நம் தமிழ்மொழியோ, அன்றிலிருந்து இன்றுவரை ஆல்போல் தழைத்து, சீரும் சிறப்பும் பெற்று சிறந்தோங்கி நிற்கின்றது.

தமிழர் நாம் நம் தாய்மொழியாம் தமிழை எண்ணிப் பெருமைப்படுவோம். அதன் சிறப்புணர்ந்து மார்தட்டுவோம்.

வாழ்க நிரந்தரம்!
வாழ்க தமிழ்மொழி!
வாழிய வாழியவே!

நன்றி! வணக்கம்.